புதிய அவையம்

PUTHIYA AVAIYAM
(PEER – REVIEWED JOURNAL)
ISSN :2456-821X
Vol. 08, Issue 02, January 2025

# தேம்பாவணி- இரட்சணிய யாத்திரிகம் ஆகியவற்றில் அறம் – ஒப்பீடு

**இரா. பிரேமாவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்- 635601.

**நெறியாளர்: முனைவர் எம். சரளாதேவி**
தமிழ்த்துறைத் தலைவர்(சுயநிதிப்பிரிவு)
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்- 635601.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஏராளமான சான்றோர் தொண்டாற்றி வருகின்றனர். குறிப்பாக, சமயச் சான்றோர்கள் அளப்பரிய தொண்டினைச் செய்து வருகின்றனர். ஒவ்வொரு சமயமும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டு இயங்கி வருகின்றன. ஆயினும் அனைத்துச் சமயத்தவர்களும் தத்தம் சமயத்தின் கொள்கைகளை எடுத்துரைப்பதற்குத் தமிழைப் பயன்படுத்தியுள்ளனர். இதனால் சமயக் கருத்துகள் பரவலாக்கப்படுவதும், தமிழ் வளர்ச்சியும் ஒருங்கே வளர்ந்த வண்ணம் உள்ளன. மேலை நாட்டிலிருந்து கிறித்தவம் பரப்ப வந்தவர்கள் சமயம் பரப்பியதோடு, தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி உள்ளனர். இலக்கியம், இலக்கணம், ஒப்பிலக்கணம், அகராதி, நிகண்டுகள், காப்பியம், சிற்றிலக்கியங்கள் எனப் பல்வேறு பங்களிப்புகளைத் தமிழுக்கு அளித்துள்ளனர். மேலை நாட்டினர் மட்டுமின்றி தமிழ்நாட்டில் கிறித்துவத்தை ஏற்று இலக்கியம் படைத்தவர்களால் தமிழ் செழுமை அடைந்தது. அவர்தம் படைப்புகளில் குறிப்பிடத்தக்க காப்பியங்களாக விளங்குபவை தேம்பாவணியும் இரட்சணிய யாத்திரிகமும் ஆகும். இக்காப்பியங்களில் காணலாகும் அறம் குறித்த சிந்தனைகளை ஒப்பிட்டு ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேம்பாவணியில் பாலமாட்சிப் படலம்  வரையுள்ள பாடல்களும், இரட்சணிய யாத்திரிகத்தில் சுவிசேட மார்க்கப் படலம் வரையுள்ள பாடல்களும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**தேம்பாவணி**

தேம்பாவணி நூல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவரால் இயற்றப்பட்டது. இது கத்தோலிக்கச் சமயச் சார்பு நூலாகும். சூசையப்பரைக் காவிய நாயகராகக் கொண்டு விளங்குவது. 3615 பாடல்களைக் கொண்ட இந்நூல் முதல் காண்டம் ,இரண்டாம் காண்டம், மூன்றாம் காண்டம் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஓவ்வொரு காண்டத்திற்கும் பன்னிரண்டு படலங்கள் என 36 படலங்களைக் கொண்டது. தேம்பாவணி என்பதற்கு தேன் போன்ற பாக்கள் என்றும், வாடாத மாலை என்றும் பொருள்படும்.

**வீரமாமுனிவர்**

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் வெனிஸ் மாநிலத்தில் காஸ்திகிளியோன் என்ற சிற்றூரில் கொண்டல் பெஸ்கி, எலிசபெத்து என்ற பெற்றோருக்கு 1680 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். தம் 18 அம் வயதில் துறவறத்தை மேற்கொண்ட இவர் பின்னாளில் திருமறைக் குருப் பட்டம் பெற்றார். 1710 ஆம் ஆண்டு தம் முப்பதாம் வயதில் லிஸ்பனிலிருந்து புறப்பட்டு அம்பலக்காட்டை அடைந்தார். தமிழ்,தெலுங்கு, வடமொழி, கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரஞ்சு, பார்சி, இந்துஸ்தானி முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தம் பழக்க வழக்கங்களால் தமிழராகவே விளங்கியதால் தமிழ் அறிஞர்கள் இவரை வீரமாமுனிவர் என அழைத்தனர். இவர் சதுரகராதி, திருக்காவலூர்க்கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை,  தொன்னூல் விளக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருவின் கதை, ஞானக்கண்ணாடி முதலான நூல்களைப் படைத்தார். தமிழ் மொழியில் எழுத்துச்சீர்திருத்தம் மேற்கொண்டார். 1746 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் நாள் தம் 66 ஆம் வயதில் மறைவெய்தினார்.

**இரட்சணிய யாத்திரிகம்**

இந்நூல் ஜான் பனியன் என்னும் ஆங்கில அறிஞர் இயற்றிய ‘மோட்சப் பயணம்’ (Pilgrim’s Progress) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது. பாவமுள்ள உயிர் கவலையால் நொந்து கிறிஸ்துவின் அருளால் திருந்தி மோட்சம் அடைவதை இக்காப்பியம் விளக்கிக் கூறுகிறது. இக்காப்பியத்தின் தலைவராக உள்ளவர் ஏசு கிறிஸ்து. இந்நூல் ஐந்து பருவங்கள், 47 படலங்களையும் 3766 பாடல்களையும்  கொண்டுள்ளது.

**எச். ஏ. கிருட்டிணப் பிள்ளை**

எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை 1827 ஆம் ஆண்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கரையிருப்பு எனும் சிற்றூரில் ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் பிறந்தார். அவர்தம் பெற்றோர் சங்கர நாராயணப் பிள்ளை, தெய்வநாயகி அம்மையார் ஆவர். தம் தந்தையிடமும் மாணிக்கவாசகத் தேவர், கடல்நாதக் கவிராயர், பிலவண தேசிகர் ஆகியோரிடம் கல்வி பயின்றார். தொடக்கத்தில் வைணவராக இருந்த இவர், 1858 ஆம் ஆண்டு கிறித்தவராக மாறினார். அன்று

முதல் என்றி ஆல்பிரட் கிருட்டிணப்பிள்ளை என அழைக்கப்பட்டார். இவர் இயற்றிய பிற நூல்கள்: இலக்கணச் சூடாமணி, போற்றித்திரு அகவல், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம் முதலானவை. இவர் 03.02.1900 அன்று மறைவெய்தினார்.

**அறம்**

அறம் என்ற சொல்லுக்கு நீதி, தர்மம் என்ற சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. அறமும் பொருளும் இன்பமும் வீடடைதலுமாகிய இந்நான்கும் நூல் தழுவப்படும் பயனாகும் என்று நன்னூல் குறிப்பிடுவதை அறியலாம்.

அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே (நன்-10)

அறம் எனும் சொல் அரசாட்சிக்கும் பயன்பட்டுள்ளது என்பதை “ 'அறம்' என்பதை அறக்கடவுள், அறநூல் என்ற பொருள்களிலும் புலவர்கள் கையாண்டுள்ளார்கள். குறிப்பாக அரசர்களுக்கும் அரசாட்சிக்கும் வேண்டிய நியதிகளை வலியுறுத்தும் போது 'அறம்' என்ற கலைச்சொல்லை (தர்மம்) புலவர்கள் பயன்படுத்துகிறார்கள்.” என்று ராஜ்கௌதமன் சுட்டிக்காட்டியுள்ளார். (ராஜ் கௌதமன், தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப. 29)

ஆன்மீக உலகில் அறம் என்ற சொல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு “மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே – முழுநிறைவடிவமே- என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே 'அறம்' என்று ஆன்மீக வண்ணம் குழைத்த மற்றொரு விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு” என்று விளக்கம் பெறப்படுகிறது. ( தண்டபாணி விருத்தியுரை, திருக்குறள் அறத்துப்பால், பக்.42-43)

**நாட்டில் அறம் செழித்தல்**

தேம்பாவணியில் வளன் சனித்த படலம் தாவீது மன்னன் மரபில் பிறந்த காப்பியத் தலைவராகிய வளன் என்னும் சூசை பிறந்த வரலாற்றைக் கூறும் பகுதியில், தாவீதின் மேன்மை எடுத்துரைக்கப்படுகிறது. எருசலேம் நகரில் எவ்வாறு அறம் செழித்திருந்தது என்பதையும் வீரமாமுனிவர் பாடுகிறார்.

செங்கோல் தவறாமல் ஆட்சி புரிந்ததால், கல்வி நன்மையும், செல்வ நன்மையும், அறத்தின் நுட்பமான நன்மையும் நிறைந்ததால் இனிமை மிகுந்த நாடாக அந்நாடு விளங்கியது என்பதைப் பின்வரும் பாடலில் எடுத்துரைத்துள்ளார்.

கோல்நலம் கோடிலா நிறுவிக் கூர்த்தலால்

நூல்நலம் பொருள்நலம் அறத்தின் நுண்நலம்

தேன்நலம் இனிதினில் திளைந்து நாடெலாம்

மீன்நலம் பயின்றவான் வியப்ப வாழ்ந்ததே -173

வளன் சனித்த படலம்- 7

இரட்சணிய யாத்திரிகத்தில், நற்செய்தியாளன் விண்ணாட்டின் சிறப்பினையும் அந்நகரத்தின் மேன்மையையும் கிறித்தியானுக்குச் சொல்லும் பரம இராசசியப் படலத்தில் திருநாட்டின் சிறப்பு விவரிக்கப்படுகிறது.

கங்கையாறு ஐவகை நிலத்தை வளப்படுத்தி அறத்தைப் பாதுகாத்து, உயர்வு தாழ்வு இல்லாமல் எங்கும் ஒரே சமமாய் இவ்வுலகத்திலும் வல்லமை மிகுந்த கடவுள் மன்னனின் ஆணைக்கு ஒப்பாகும் இந்த ஆறு என்று குறிப்பிடுகிறார் எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை.

இதை,

வீற்றுவீற் றாகிச் சென்றை வகைநில வேறு பாட்டை
மாற்றிநன் மருத வைப்பா வளம்படுத்து அறத்தை ஓம்பி
ஏற்றமும் தாழ்வும் இன்றாய் எங்குமோர் சமமாய் ஈண்டும்
ஆற்றல்சால் கடவுள் வேந்தன் ஆணையைப் பொருவும் வாரி -100

( பரம இராசரியப் படலம்- 8)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

மேலும் மெய்யுணர்ச்சிப் படலத்தில் கிறித்தியான் அடைகின்ற கவலையைக் குறிப்பிடும் போது,

"அறம்கிளர் பரலோ கத்துக் கரசனைப் பரவிப் போந்து
புறம்கிளர் வெளியு லாவிப் புத்தகச் சுருளை நாடி
.. …….. ………. ……… …….. -76

( மெய்யுணர்ச்சிப் படலம்-47)

என்றும்

வென்றாழிந டத்திய றம்படு விண்ணும் மண்ணும்
ஒன்றாகவி ரிந்துக விந்துயர்ந் தோங்கி உம்பர்
… …… ….. ……. ……. -167

(அரசியல் படலம்- 9)

என்றும் குறிப்பிடுவதிலிருந்து விண்ணலக மன்னனாகிய இறைவன் வீற்றிருக்கும் இடம் அறம் மிகுந்து காணப்படுகிறது என்று கிருட்டிணப்பிள்ளை குறிப்பிடுகிறார்

**ஈரறமே சிறப்பு**

தேம்பாவணி பாலமாட்சிப் படலத்தில் சூசை காட்டில் சென்று வாழப்புகுந்த போது, முதியவர் ஒருவர் தடுத்து நிறுத்தி அறிவுரை வழங்குகிறார். இல்லறம் துறவறம் ஆகிய இரண்டினும் துறவறமே மேன்மையானது என்று கூறி, அதைக்காட்டிலும் சிறந்தது எதுவென்று கூறினால் அதையே தான் விரும்புவதாகக் கூறினான். அதற்கு அந்த முதியவர், இல்லறம் துறவறம் ஆகிய இரண்டையும் இணைத்தால் தமக்கும் பிறர்க்கும் பயன்படக் கூடிய அறமாக விளங்கும் என்று அறிவுறுத்துவதை முனிவர்

“ஈரறம் பிரிந்து நோக்கில், இயம்பிய துறவின் மாட்சி

பேரறம் ஆவ தன்றிப் பிரிவிலா இரண்டும் தம்முள்

ஓரறம் ஆகச் சேர்க்கில் உறுதியும் பயனும் ஓங்கத்

தேரறம் ஆகும்” என்றான் செழுந்துறைக் கேள்வி மூத்தோன்” -267

(பால மாட்சிப் படலம்- 40)

என்று அறிவுறுத்துகிறார்.

இரட்சணிய யாத்திரிகம் சிருட்டிப் படலத்தில் இறைவனால் படைக்கப்பட்ட மாந்தர்களாகிய ஆதாமும், அவன் மனைவி ஏவாளும் ஏதேன் எனும் அழகிய சோலையில் தமது இருப்பிடத்தை மலர்க்கொத்துக்களை உடைய அழகிய கொடிகளால் கூரை வேய்ந்து மகிழ்வதைக் குறிப்பிடும் எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை, அவர்களின் மலர்மண்டபத்தில் அறம் என்ற ஒன்றனை மட்டுமே தங்களுடன் குடியமர்த்திக் கொண்டு வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

“ ….. ……. ……. …….. …….. …….. ………

பொங்கரின் புதுமை யாகப் புனைந்தசித் திரப்பூ மன்றில்

அங்கண்வான் அகம் கொண் டாட அறங்குடி புகுத்தி வாழ்வார் -188

( சிருட்டிப் படலம் 16)

ஆதாமும் ஏவாளும் மட்டுமே படைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் இருவரும் அறத்தை மட்டும் தங்களுடன் குடியமர்த்தி வாழ்ந்ததாக கவிஞர் குறிப்பிடுகின்றார்.

வீரமாமுனிவர் தம் காவியத்தில் ஈரறத்தை வலியுறுத்தும் நிலையில், எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை ஆதாமும் ஏவாளும் துறவறம் நீக்கி அறத்தைக் கைக்கொண்டு வாழ்வதாகக் காட்டுகிறார்.

**அறம் மட்டும் செய்தல்**

தேம்பாவணியில், முதியவரின் அறிவுரையால் மனம் தெளிந்த சூசை நாடு திரும்பி வந்து, ஊனோடு கூடிய உடலைப் பெற்றிருந்தாலும் துறவறத்தோடு

கூடிய உயர்வையும் விண்ணுலக மேன்மைகளையும் பெற்று அறம் ஒன்றையே செயல்படுத்துகிறான் என்று வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார். இக்கருத்தை,

மீன்ஆர் வானம் பெற்றவன் ஓதி விதிபெற்றுத்
தேன்ஆர் கானம் பெற்றதி ருந்தும் தெளிவாறாது
ஊன்ஆர் காயம் பெற்றிவன் உவ்வோன் உயர்மற்ற
வான்ஆர் மானம் பெற்றறம் ஒன்றாய் வனைகின்றான் -274

(பால மாட்சிப் படலம் -47)

எனும் பாடல் உணர்த்துகிறது.

மரியும் சூசையும் தம் இல்லற வாழ்வில் இல்லறம் துறவறம் ஆகிய இரண்டினையும் ஒரே அறமாய்க் கொண்டு இல்லறம் நடத்தியதாக வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.வீரமாமுனிவர் இல்லறம் துறவறம் இரண்டையும் வலியுறுத்தும் நோக்கில், ஈரறம் பொருத்து படலம் எனும் பெயரில் படலம் அமைத்துள்ளார்.

இரட்சணிய யாத்திரிகம் சுவிசேட மார்க்கப் படலத்தில், நற்செய்தியாளர் கூறுவதாக அமைந்துள்ள பகுதியில், 'மற்றவர்கள் உங்களுக்குச் செய்ய வேண்டுமென்று உங்கள் உள்ளத்தில் நினைத்துக் கொள்ளுவது எதுவோ, அதுவே நீங்கள் பிறருக்குச் செய்ய வேண்டிய சிறந்த அறம் என்பதனை அறிந்து கொள்வீர்களாக. உண்மையை ஆய்ந்து சொல்ல வேண்டுமானால் இதுவே நீதிச் சட்டமும், மற்ற தீர்க்க தரிசிகள் சொன்ன முன்னறிவுரைகளும் ஆகும்' எனும் கருத்தினை எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை

" மற்றை யோருமக் குச்செய மனக்கொள்வது எதுகொல்

அற்ற தேபிறர்க்கு ஆக்குநல் அறமென அறிமின்

இற்றி தேநியா யப்பிர மாணமும் ஏனோர்

சொற்ற பௌசிக தரிசனங் களுமுண்மை துணியில் -316

(சுவிசேட மார்க்கப் படலம் 70)

என்று பாடியுள்ளார்.

இப்பாடல் மூலம் பிறரிடம் நாம் விரும்புவதை, பிறருக்கு நாம் செய்ய வேண்டும். அதுவே அறம் என்று குறிப்பிட்டுள்ளார் எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை.

**முடிவுரை**

நாட்டில் அறம் மிகுந்திருத்தல் வேண்டும் என்பதை இரு காப்பியங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை நிலவுலகம் மட்டுமின்றி, இறைவன் இருக்கும் விண்ணுலகமும் அறம் மிகுந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.இல்லறம் துறவறம் ஆகிய ஈரறமே அறம் என்று வீரமாமுனிவர் உணர்த்தியுள்ளார்.ஆதாமும் ஏவாளும் அறத்தையே துணையாகக் கொண்டு வாழ்ந்ததாக எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.சூசை அறம் ஒன்றையே செய்ததாகவும் வீரமாமுனிவர் காட்டுகிறார்.

பிறர் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அவற்றையே நாம் பிறருக்குச் செய்வதே அறம் என்று குறிப்பிடுகிறார் எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை.

**துணை நூல்கள்**

1. தேம்பாவணி முதல் காண்டம், புலவர் சே. சுந்தரராசன் (உரை),

பாரிநிலையம்,184/88, பிராட்வே, சென்னை-600 108. மு.ப.2010.

2. இரட்சணிய யாத்திரிகம், பகுதி-1, புலவர் சே. சுந்தரராசன் (உரை) பாரிநிலையம், 184/88, பிராட்வே, சென்னை-600 108. மு.ப.2014.
3. நன்னூல் மூலமும் விருத்தியுரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., திருநெல்வேலி, மு.ப.1956.
4. தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ராஜ் கௌதமன், விடியல் பதிப்பகம், கோவை-641 015. மு.ப. டிசம்பர் 2008.